ஊர்கூடி தேரிழுப்போம்...

# நாங்கள்

அல்வாய் - மனோகரா

இதழ் 14

பங்குனி 1 – 31 2022

பிரதம ஆசிரியர்
க.பரணீதரன்
இணைஆசிரியர்கள்
வெ. துஷ்யந்தன்
செ. கணேசன்

அல்வாய் மனோகராக் கிராம ஆவணப்படுத்தல் மாதாந்த பத்திரிகை 30/-

நாங்கள் வாசகர்களுக்கு வணக்கம்,

மன்னிக்கவும் நீண்ட கால இடைவெளியின் பின் நாங்கள் வெளியாகிறது. பேப்பர் தட்டுப்பாடு காரணமாக நாங்கள் பத்திரிகையை உரிய காலத்தில் வெளியிட முடியாது போய் விட்டது.

நாங்கள் பத்திரிகை எமது ஊரில் உள்ள அனைவரையும் மிகுந்த சிரத்தை எடுத்து ஆவணப்படுத்த முயன்று வருகின்றது. ஒரு பத்திரிகையில் அனைத்தையும் செய்து விட முடியாது. ஆனால் அனைவரையும் ஆவணப்படுத்துவோம். உங்கள் குடும்பத்தவர்கள் பற்றிய தகவல்களை நீங்கள் தந்தால் தான் முழுமையான ஆவணப்படுத்தலை மேற்கொள்ள முடியும். பலரிடம் நாம் தகவல்களை தரும்படி கேட்டும் குறித்த கால எல்லைக்குள் வந்து சேருவதில்லை. இதுவும் சில சமயம் பத்திரிகை பிந்தி வருவதற்கு காரணமாக அமைகின்றது.

நாம் முன்னர் பல தடவை குறிப்பிட்டது போல எமது ஊருக்கென்று சிறந்த பண்பாடு, ஒழுக்கம், வெளியுலகில் தனி மரியாதை காணப்படுகின்றது. ஆனால் அண்மைக்காலமாக நடந்தேறும் சில விடயங்கள் இவ்வளவு காலமாக எம் மூதாதையர்கள் கட்டிக்காத்த பண்பாட்டு விழுமியங்கள் சிதைந்து விடுமோ என்ற அச்சத்தையும் தோன்றுவிக்கின்றது.. பல இலட்சம் ரூபா செலவில் "பாட்டு கோஷ்டி" இடையிடையே எமது ஊரில் திருவிழாக்களின் போது நடாத்தப்படுகின்றது. ஆனால் ஒவ்வொரு பாட்டுக் கோஷ்டியின் போதும் இளைஞர் களிடையே(கூடுதலாக வெளியூர் இளைஞர்களால்) சண்டை ஏற்படுகின்றது. எமது சமூக நிறுவனங்கள் ஏன் இவ்வாறான நிகழ்ச்சிகளுக்கு இடமளிக்கின்றன. தொடர்ந்து ஒவ்வொரு பாட்டு கோஷ்டியின் போதும் சண்டை வருகின்றது. அவ்வாறான நிலைமையில் இதை தவிர்ப்பது நம் அனைவருக்கும் நலனே. பாட்டு கோஷ்டிக்கு பல லட்சம் பணத்தை செலவளிப்பதை விட குறித்த 3 மணித்தி யாலத்தில் பாடப்படும் பாட்டுகளின் ஒலித்தட்டுகளை குறித்த திருவிழாத்தினத்தில் மிகக்குறைந்த செலவில் ஊரவர் களுக்கு வழங்கலாம். 25 பாட்டு பாடுவதற்கு இலட்சக் கணக்கில் செலவளிக்க வேண்டுமா? அந்த பணத்தை எமது ஊர் அபிவிருத்திக்கு பயன்படுத்தலாமே??

- க.பரணீதரன்

பொது நிதியை கேளிக்கை நிகழ்வுகளுக்காக வீண் விரயமாக்காதீர்கள்

## உள்ளே...


**நாதக் கலையூடாக எமதூருக்கு பெருமை சேர்த்த நாதஸ்வரக்கலைஞர் பழனி சபாரட்ணம்**



**காலம் கரைத்த மனப்பதிவுகள் – 03**

**மூன்றாம் பனையடி ஆழக்கிணறு மீள் நோக்கு**

**கட்டடக்கலைஞரும், உதைபந்தாட்ட நட்சத்திர வீரரும், ஆன்மிகவாதியுமாகிய க.பாக்கியராசா(மாலி)**



**எம்மவர்கள் சிறுகதை – 3**
**“வேட்டையாடு விளையாடு” – து. சதீஷ்**

தொடர்புகளுக்கு:
கலைஅகம்,
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயில் வீதி
அல்வாய்.
தொலைபேசி : 0775991949
email - jeevanathy@yahoo.com



# நாதக் கலையூடாக எமதூருக்கு பெருமை சேர்த்த நாதஸ்வரக் கலைஞர் பழனி சபாரட்ணம்

■ செல்லக்குட்டி கணேசன்

கல்வித்துறை, கலைத்துறை, விளையாட்டுத்துறை ஆகியவற்றிற்கு பேர்போன கிராமங்களில் ஒன்றாக விளங்கு கின்ற எமது கிராமம். பல சாவல்களை எதிர் கொண்டு முன்னேறி தமக்கென ஒரு ஆழமான தடத்தை பதித்துள்ளது என்பது மிகையான கூற்று அல்ல. காலத்துக்குக் காலம் ஒருவரோ அல்லது அதற்கு மேற்பட்டவர்களோ தமது செய்கையினாலும் சேவையினாலும் எமது கிராமத்தை வெளி உலகில் பதிவு செய்துள்ளார்கள். அவ்வாறு பதிவு செய்தவர்களில் அமரரான பழனி சபாரத்தினம் அவர்களும் ஒருவராவார்.

இவர் அல்வாய் தெற்கு உல்லியவத்தை குறிச்சி யில் வாழ்ந்து வந்தவர்களான அமரர் திரு.திருமதி.பழனி சின்னக்குட்டி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனாவார். இவருக்கு திருமதி. நல்லம்மா கிருஷ்ணபிள்ளை, திருமதி சரஸ்வதி செல்வராசா, ப.நவரத்தினம் சாத்திரியார் (மல்லாகம்) ஆகியோர் உடன் பிறப்புக்களாவார். 14.11.1925 இல் பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை தேவரையாளிச் சைவ வித்தியாசாலையில் கற்றார். இயல்பாகவே இசை ஞானம் கொண்ட இவர் தந்தைவழி மரபுத் தொழிலைச் செய்து வந்தாரெனினும், அத் தொழிலின் நிமிர்த்தம் தந்தைக்கு ஏற்பட்ட விபத்தின் காரணமாக அத் தொழிலைக் கைவிட்டு வெவ்வேறு தொழில்களை வாழ்வாதாரத்திற்காக செய்து வந்தார். இவ்வேளையில் அல்வாய் வடக்கு வீரபத்திரர் கோயிலடியைச் சேர்ந்த காத்தார் சின்னத்துரை (காப்புலி) அவர்களுடனான குடும்ப ஊடாட்டம் காரணமாக நாதஸ்வரக் கலையை அவரிடம் பயின்று அவருக்குத் துணையாக பல வருடங்கள் சேவை புரிந்து தன்னை ஒரு ஆளுமை மிக்க நாதஸ்வரக் கலைஞனாக உயர்த்திக் கொண்டார். இக்காலப் பகுதியில் மைத்துனர் றைவர் கிருஷ்ணபிள்ளை அவர்களின் உதவியோடு மோட்டார் கார் ஓட்டுவதற்கான பயிற்சியைப் பெற்று அதற்கான அனுமதிப் பத்திரத்தையும் பெற்று தன்னை மேலும் ஒரு நிலைக்கு உயர்த்திக் கொண்டார்.

சிறுபராயத்தில் இருந்தே நாடகத் துறையில் தனது கவனத்தை செலுத்தி வந்தவர் பல நாடகங்களை நடித்து தனக்கென ஒரு இடத்தை தக்க வைத்துக் கொண்டார். அதுமட்டுமல்லாமல் எமது கிராமத்தில் உள்ள கரப்பந்தாட்ட முன்னணி வீரருக்கு இணையாக பல போட்டிகளில் கலந்து கொண்டு எமது கழகத்திற்கு நல்ல பெயரை பெற்றுத்தந்தார். இவ்வாறு தொழிலோடு கலையும், கலையோடு தொழிலுமாக இயங்கி வந்தவர் திருமண காலம் பொருந்தி வர அல்வாய் தெற்கு புதுவீடு குறிச்சியில் வாழ்ந்து வந்தவர்களான அமரர்கள் திரு.திருமதி.சவலை பிள்ளையம்மா தம்பதியினரின் மகள் தருமவதியை காதல் திருமணம் செய்து கொண்டார். இவர்களின் இல்லறவாழ்வின் பயனாக ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு தர்மரட்ணம் என்று பெயர் சூட்டி மகிழ்ந்தனர். கணவனும் மனைவியும் குழந்தையுமாக வாழ்ந்த இக்குடும்பத்தின் மகிழ்ச்சி நீடிப்பதற்கு முன்பாகவே தர்மவதி காலமானார். இவ் இழப்பால் துவண்டு போன கணவனின் துன்ப நிலை கண்டு கலங்காத உறவுகள் எவரும் இல்லை. காலப் போக்கில் உறவுகள் பலரினது வற்புறுத்தலினால் அல்வாய் தெற்கு கிரிச்சியால் குறிச்சியைச் சேர்ந்த தந்தைவழி மாமியார் திருமதி பொன்னம்மா மாணிக்கம் மகள் கனகம்மாவை கரம் பற்றிக் கொண்டார். இத் தம்பதியினரின் இல்லற வாழ்வின் பயனாக கனகரத்தினம்(மகள்), அழகரத்தினம் (மகன்) ஆகியோரை பிள்ளைகளாகப் பெற்றுக் கொண்டனர்.

இல்லற வாழ்வோடு சமூக நிறுவனங்களிலும் தன்னையும், தனது குடும்பத்தினரையும் இணைத்துக் கொண்டு செயற்பட்டவர். எமது ஆலடிப்பிள்ளையார் ஆலய சகல செயற்பாடுகளிலும் தனது பங்களிப்பை செய்து வந்ததோடு, நான்காம் திருவிழா உபயகாரராக இணைந்து கொண்டு அதனூடாகவும் எமது ஆலய வளர்ச்சிக்கான பங்களிப்பை நல்கி வந்தார். இதன் தொடர்ச்சியை அவரது மகன் ச.அழகரட்ணம் பேணிக்காத்து வருகிறார் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். எமது ஆலயம் ஒரு நிர்வாக கட்டமைப்புக்குள் (1943) வந்தபோது பரிபாலன சபையின் முதல் தலைவராக இவரின் தந்தை பழனி அவர்களே தெரிவு செய்யப்பட்டார் (1944/1945) என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

எமது கிராமத்திற்கு நாதக் கலையினூடாக நல்ல பெயரை பெற்றுத் தந்த கலைஞர் இவராவார். இவர் எமது கிராமங்களில் மட்டுமல்ல. பஞ்சமர் சமூகங்கள் வாழுகின்ற ஆலயங்கள் அவர்களின் திருமண நிகழ்வுகள், பூப்புனித நீராட்டு வைபவங்கள் என்பவற்றிலும் இவரின் சேவகம் இருக்கும். இத்தொழிலினூடாக நமது ஊரை அடையாளப் படுத்திக் கொண்டிருந்த இவர் வாழும் காலம் வரை எமது ஆலய ஆஸ்தான நாதஸ்வரக் கலைஞராக விளங்கினார்.

நான் சிறுவயது முதல் இவரை அறிவேன். நகைச்சுவை ததும்ப கதைப்பதில் வல்லவர். இவரின் நாதஸ்வரக் கச்சேரிகளைக் கேட்டிருக்கிறேன். ஆனால் ஆலடியானின் ஊஞ்சல்பாட்டை நாதஸ்வரத்தினூடாக வெளிப்படுத்தும் வல்லபம் தனித்துவமானது.

இவ்வாறு வாழும் காலம் வரை நாதஸ்வரத்துடன் வாழ்ந்து கொண்டிருந்தவர் முதுமையும் நோயும் ஒன்றுசேர 16.12.2001 இல் இவ்வுலகை விட்டு நீங்கி இறைபாதத்தைத் தொட்டார்.

அன்னார் வாழ்ந்த “கனகமகால்” இல்லமானது அவரது எச்சத்தாரால் புதுபொலிவு பெற்றுக் காணப்படு கின்றது என்பது அத்தம்பதிகளின் ஆசீர்வாதமே.

# காலம் கரைத்த மனப்பதிவுகள் - 3

■ கலாநிதி த. கலாமணி

பரந்தனிலே பாம்புக்கமம் என்று ஓர் இடம் உள்ளது. பரந்த வயல்கள் நிறைந்த இடம். வயல் நிறைந்த பூமி என்பதனால் பாம்புக்கமம் ஒரு கிராமமாகவே உரு வாகியிருந்தது. இந்த வயலிலே தான் அக்கிராமத்திலுள்ள மக்களும் அயற் கிராமங்களிலுள்ளவர்களும் வேலை செய்து வந்தார்கள். ஆனால் அந்த வயலிலே வேலை செய்து வந்தவர்களை இடை இடையே நாகம் தீண்டி வந்தது. இதனால் பலர் மெல்ல மெல்ல அக்கிராமத்தி லிருந்து வேறு இடங்களுக்கு இடம்பெயரத் தொடங்கினர். பாம்புக்கமம் என்ற பெயர்கூட காரணப் பெயராகவே உருவாகி இருக்க வேண்டும்.

வயலில் வேலை செய்தவர்கள் இடம் பெயர்ந்தத னால் வயற் சொந்தக்காரனுக்கு வேலை செய்பவர்களை தேடிப்பிடிப்பது சிரமமான ஒன்றாக இருந்தது. இதனால் தனது வயலை விற்றுவிட்டு வெளியிடமொன்றுக்கு இடம் பெயர்ந்து விடலாம் என்று எண்ணினான். இதேவேளை பாம்புக்கமத்தின் சூழலில் வசித்து வந்த விநாசித்தம்பி என்பவர் வயற்காணியொன்றைக் குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்ய எண்ணியிருந்தார். இந்தச் சமயத்தில் பாம்புக்கமம் வயலுக்குச் சொந்தக்காரன் தமது வயலை விற்க இருப்பதான பேச்சும் அவர் செவியை எட்டியிருந்தது. ஆனால் பாம்புக்கமம் வயலை எவரும் விலைக்கு வாங்க முன்வரவில்லை. அதனால் குறைந்த விலையிலேனும் அதனை விற்றுவிட வயற் சொந்தக்காரன் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்தார். இந்த நேரத்தில் தான் ஓரிரவில் விநாசித்தம்பி அவர்களின் கனவில் நாகபூஷணி அம்மன் தோன்றி, “நீ என்னை ஆதரிப்பாயானால் பாம்புக்கமம் வயலில் வேலை செய்பவர்களை நாகம் தீண்டாமல் நான் பார்த்துக் கொள்கிறேன்” என்று கூறியது.

இக்கனவின் பிரகாரம் நாகபூஷணி அம்மனின் வாக்கை தெய்வ வாக்காகக் கொண்டு விநாசித்தம்பி அவர்கள் அந்த வயலை விலைக்கு வாங்க முன் வந்தார். மிகவும் சொற்ப விலையிலேயே அந்த வயல் அவருக்குக்கிடைத்தது. வேலையாட்களின் எண்ணிக்கைக கேற்ப வயலில் ஒரு பகுதியில் விவசாயம் செய்ய விரும்பிய விநாசித்தம்பி அவர்கள் முதலில் வயலுக்கு அண்மித்த பகுதியிலுள்ள ஓரிடத்தில் சிறிய அளவில் நாகபூஷணி அம்மனை வைத்து வழிபட்டுவரத் தொடங்கினார். ஒரு மரத்தின் கீழே அமைந்த புற்று ஒன்றின் முன்னால் ஒரு சிறிய கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு அதனுள்ளே நாகபூஷணி அம்மன் பிரதிட்டை செய்யப்பட்டது.

அம்மனின் அருளால் எவ்வித இடையூறுமின்றி விவசாயத் தொழில் இடம்பெற்று வந்தது. நெற் பயிர்களும் செழித்து வளர்ந்து நல்ல அறுவடையைக் கொடுத்தன. இதனைக் கேள்வியுற்றவர்கள் பலர் மீண்டும் பாம்புக் கமத்துக்கு வந்து சேரத்தொடங்கினர். இதனால் விநாசித்தம்பி அவர்கள் முழுவயலையும் பயன்படுத்தத் தொடங்கி, நல்ல சம்பாத்தியமும் பெற்றார். நாகபூஷணி அம்மன் ஆலயமும் மெல்ல மெல்ல வளர்ச்சி பெற்றது.

ஆலயம் வளர்ச்சியுற்ற நிலையில் பாம்புக்கமத்தி லுள்ளவர்களும் அயற் கிராமங்களிலுள்ளவர்களும் நாக பூஷணி அம்மன் ஆலயத்திற்கு வந்து வழிபடத் தொடங்கினர். ஆலயப் பூசகராக விநாசித்தம்பி அவர்களே இருந்து வந்தார். வயல் மூலம் கிடைத்த வருமானமும் அம்மன் ஆலயத்திற்கு மக்கள் அதிகமாக வரத்தொடங்கி யமையும் நாகபூஷணி அம்மனை மகிழ்ச்சியுறச் செய்ய என்ன செய்யலாம் என விநாசித்தம்பி அவர்களைச் சிந்திக்கத் தூண்டின. இதன் பேறாக வருடத்தில் இரண்டு முறை அல்லது மூன்று முறை புராண இசை நாடகங்களை மேடையேற்றலாம் என அவர் தீர்மானித்தார்.

முன்பு ஒரு சமயம் ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ் வரர் ஆலயத்திலே நடைபெற்ற அண்ணாவியார் எஸ்.தம்பிஜயா அவர்கள் ஆறுபேர்களை மாத்திரம் கொண்டு மேடையேற்றிய சம்பூர்ண அரிச்சந்திரா நாடகத்தைப் பார்த்திருந்தமை ஞாபகத்துக்கு வந்தது. 1940களிலே இடம்பெற்ற இந்த நாடகம் வரலாற்றுச் சிறப்புடையது. நடிகமணி வி.வி.வைரமுத்து அவர்கள் முதன் முதலில் அரிச்சந்திரனாக நடித்த நாடகம் இதுவே. அண்ணாவியார் எஸ்.தம்பிஜயா அவர்கள் முன் அரிச்சந்திரனாகவும் பின் சந்திரமதியாகவும் நடிகமணி வைரமுத்து அவர்கள் முன் சந்திரமதியாகவும் பின அரிச்சந்திரனாகவும் தி.விருத்தாசலம் அவர்கள் சத்திய கீர்த்தியாகவும் வே.பாலசிங்கம் அவர்கள் லோகிதாசனாக வும் முக்கிய பாத்திரங்களை ஏற்று நடித்த நாடகம் இது. மிகவும் குறுகிய காலத்தில் ஏனைய கலைஞர்களைப் பழக்கி அண்ணாவியார் தம்பிஜயா அவர்கள் இந்நாடகத்தை தனது தந்தையான கா.சபாபதி அவர்களின் நேர்த்திக்காக மேடையேற்றியிருந்தார்.

இந்த நாடகத்தின் சிறப்பைக் “கண்கூடவே” கண்டு இரசித்திருந்த விநாசித்தம்பி அவர்கள், அண்ணாவியார் தம்பிஜயாவின் முகவரியை அறிந்து கொண்டு அவரிடத் திற்கு வந்து நாடகமொன்றை “அச்சவாரம்” கொடுத்து ஒழுங்கு செய்தார். எமதூரைச் சேர்ந்தவர்களைப் பழக்கி அண்ணாவியார் தம்பிஜயா அவர்கள் புராண இசை

நாடகமொன்றை மேடையேற்றினார். பின்பு பல தடவைகள் வெவ்வேறு இசைநாடகங்கள் நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் மேடையேற்றப்பட்டன. இந்நாடகங்களிலே எமதூரைச் சேர்ந்த சி.கந்தவனம், தி.விருத்தாசலம், மு.கனகசிங்கம், வே.பாலசிங்கம், நா.கிருஷ்ணபிள்ளை, ப.சபாரத்தினம், கா.சின்னத்துரை, த.வீரசிங்கம் ஆகியோரும் இன்னும் பலரும் நடித்து வந்தனர். எமதூரின் பெண் பிள்ளைகளைப் பழக்கி மேடையேற்றிய நாடக மான "பாமாவிஷயம்" ஒரு சமயம் நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் மேடையேற்றப்பட்டது. அழகேஸ்வரி, மதுரைத் தேவி, சிவலர், தவமலர், பர்வதாமணி, சாரதாவதி ஆகி யோரும் இன்னும் சிலரும் இந் நாடகத்தில் நடித்திருந் தனர்.பிற்பட்ட காலத்திலே கலாவிநோதன் எம்.பி.அண்ண சாமி ஆசிரியர் அவர்கள் எஸ்.தம்பிஐயா அவர்களோடு இணைந்து கொண்டமையால் அரியாலையைச் சேர்ந்த உறவினர்களான வி.கே.இரத்தினம், வே.ஐயாத்துரை ஆகி யோரும் உட்பட பல நடிகர்கள் இணைந்து அண்ணாவியார் தம்பிஐயா அவர்களுடைய நாடகங்களிலே இடம் பெற்று நாகபூஷணி அம்மன் ஆலயத்திலே பல புராண இசைநாடகங்கள் மேடையேற்றப்பட்டன.

எனக்குப் பத்துவயதாக இருக்கும்போது, நாக பூஷணி அம்மன் ஆலயத்திலே மேடையேற்றி பவளக்கொடி நாடகத்திலே அல்லியின் மகன் பிலந்திரனாக என்னை எனது தந்தை (அண்ணாவியார் தம்பிஐயா) பழக்கி யிருந்தார். அர்ச்சுனனாக கலாவிநோதன் அண்ணாசாமி ஆசிரியரும், கிருஷ்ணனாக எமது தந்தையும் அல்லியாக வி.கே.இரத்தினம் அவர்களும் இந்நாடகத்தில் நடித்தார்கள். இதேவேளை, நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் தொடர்ச்சி யாக நாடகங்கள் மேடையேற்றப்பட்டு வந்தமையால், நிரந்தரமான நாடகமடுவம் ஒன்றை விநாசித்தம்பி அவர்கள் அமைத்திருந்தார்.

அன்றைய தினம், நடிகர்களையும் பருத்தித்துறை சிவாஜிலிங்கம் அவர்களின் சீன் செற்றுகளையும் ஏற்றிக்கொண்டு, வாடகைக்கு அமர்த்தியிருந்த தட்டிவான் இரவு 8மணியளவில் நாகபூஷணி அம்மன் ஆலயத்தைச் சென்றடைந்தது. முதலில் எங்கள் எல்லோருக்கும் அன்னதான மடத்திலே இரவு உணவு வழங்கப்பட்டது. பின்பு மடுவத்தின் பின்புறத்தில் நடிகர்கள் தயாராகிக் கொண்டிருந்தனர். எனது தந்தையும் அண்ணாசாமி ஆசிரியரும் ஏனைய நடிகர்களுக்கு "முகப்பூச்சு" பூசிக் கொண்டிருந்தனர். பபூன் வேடத்தில் நடிக்கின்ற கா.சின்னத் துரை அவர்கள் சி.ப.இராசத்தினம் அவர்களுடன் ஒரு புறத்திலிருந்து ஒருவர்க்கொருவர் பூச்சுப் பூசிக் கொண்டிருந் தனர். அப்போது கா.சின்னத்துரை அவர்கள் திடீரென்று பா... பாம்... பாம்பு என்று குளறத்தொடங்கினார். எங்கிருந்து வந்ததோ தெரியவில்லை. நாகமொன்று படம் எடுத்தபடி சின்னத்துரை அவர்களையே வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்தது. என்ன செய்வதென்று தெரியவில்லை. சிலர் தடி எடுக்க ஓடினர் சற்றுத் தூரத்தி லிருந்து பாம்பைப் பார்த்த நான் பயத்தில் நடுங்கினேன். அப்போது விநாசித்தம்பி அவர்கள் அவ்விடத்துக்கு ஓடிவந்தார். "பாம்பை ஒன்றும் செய்ய வேண்டாம், ஒன்றும் செய்ய வேண்டாம்" என்று உரத்த சத்தத்தில் கூறினார். விநாசித்தம்பி அவர்களைக் கண்ட நாகம் எங்கோ ஓடி மறைந்தது. அது கோயில் நாகம் என்று விநாசித்தம்பி அவர்கள் கூறிக்கொண்டார். அதன் பின்பும் 1960களின் நடுக்கூறுவரை நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் எஸ்.தம்பிஐயா - எம்.பி. அண்ணாசாமி குழுவின் பல நாடகங்கள் மேடையேற்றப்பட்டு வந்தன. நானும் சிலவேளைகளில் சிறுவர் பாத்திரத்தில் நடிப்பவராகவும் பார்வையாளராகவும் என்னுடைய தந்தையாருடன் நாக பூஷணி அம்மன் ஆலயத்திற்குச் சென்று வந்திருக்கிறேன்.




பூநகரி உதைபந்தாட்ட லீக்கின்(2022) அனுமதியுடன் பூநகரி மத்திய நண்பர்கள் விளையாட்டு கழகம் நடாத்திய வடமாகாண அணிகளை உள்ளடக்கிய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் எமது அல்வாய் மனோகரா அணி இறுதிப் போட்டியில் இளவாலை சென்லூட்ஸ் அணியை எதிர்த்து மோதி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி வாகை சூடி வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கி கொண்டது. எமது அணி சார்பாக பிரணவன் சாருஜன் 2 கோல்களை அடித்தார். போட்டியின் சிறந்த ஆட்ட நாயகனாக பிரணவன் சாருஜனும், சுற்றுப்போட்டியின் தொடர் ஆட்ட நாயகனாக சாந்தமூர்த்தி கோகுலனும், சிறந்த கோல்காப்பாளராக செல்வநாதன் இனியவனும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.





# மூன்றாம் பனையடி ஆழக்கிணறு மீள் நோக்கு

■ சீனித்தம்பி இராசநாயகம்

"சில கதவுகள் திறப்பதில்லை ஏனெனில் அவை உனக்குரியதல்ல"

மார்கழி மாதத்துக்கான "நாங்கள்" மாத இதழ் 11ல் மூன்றாம் பனையடி ஆழக்கிணறு என்ற தலைப்பில் வெளியான கட்டுரை யில் உண்மைக்கு புறம்பான பல பதிவுகள் காணப்படு கின்றன. இவ்விடயம் தொடர்பான பல பதிவுகள் முழுமையான வரலாறு அறியாதவர்களிடமிருந்தே பெறப்பட்டுள்ள தாக நான் கருதுகின்றேன். கிணறு வெட்டத் தொடங்கிய நாளிலிருந்து அதன் பயன்பாடற்ற இன்றைய நிலை வரை அனைத்து விடயங்களையும் நான் மட்டுமே அறிவேன்! வேறு எவருக்கும் தெரியாது. அக்கிணறுக் கான வரவு செலவு கணக்குப்பதிவை பேணியவன் நானே. எனவே அக்கட்டுரையில் காணப் படும் பல பதிவுகளை மறுதலித்து உண்மையான தகவல்களை பதிவு செய்யவிரும்புகிறேன்.

கிணற்றுக்கான பங்களிப்புகள் பின்வருமாறு:

நிதி

1. செ.சீனித்தம்பி
2. சி.அப்பையா
3. மு.மயிலு
4. சி.கந்தவனம்

காணி

1. சீனித்தம்பி இராசமணி
2. திருமதி மயிலு சின்னதங்கம்

அத்தோடு கிணற்றுக்காக ஒதுக்கப்பட்ட காணி பொது வாக எழுதப்படாமையினால் திருமதி மயிலு சின்னத் தங்கத்துக்கு சொந்தமான காணித்துண்டு என்னால் வாங்கப்பட்டு விட்டது.

இதேவேளை எனது தந்தை செ.சீனித்தம்பி அவர்களால் கூடுதலான நிதிப்பங்களிப்பு வழங்கப் பட்டது. எவ்வித பங்களிப்பும் வழங்காதவர்கள் இக் கட்டுரையில் முன்னிலைப் படுத்தப்பட்டிருப்பது மிகுந்த மனவேதனையை அளிக்கின்றது.

ஒரு அடி ஆழம் வெட்டுவதற்கு எவ்வளவு செலவு ஏற்படும் என்கின்ற அடிப்படையில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு ஒப்பந்தகாரரிடம் கிணறு வெட்டு வதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இதனால் கிணற்று உரிமையாளர் உட்பட வேறு எவரும் கிணறு வெட்டுவதில் தமது உடல் உழைப்பை வழங்க வேண்டிய தேவை ஏற்படவில்லை.

கிணறு அமைக்கப்பட்டு ஒரு சில வருடங்கள் பங்காளர்கள் ஒருவர் மாறி ஒருவராக வாளி மற்றும் கயிறு என்பவற்றை இட்டு வந்தார்கள்; ஆண்டு தோறும் கிணற்றை கலக்கி இறைப்பதற்காக நிதியையும் வழங்கினார்கள். காலப் போக்கில் எனது தந்தையும் எனது மாமனார் சி.அப்பையாவும் மட்டுமே அதற்கான நிதிப்பங்களிப்பை வழங்கி வந்தார்கள். மேலும், தண்ணீர் அள்ளுவதற்கான பெரிய படி போடப்படாத காரணத்தால் சில வருடங்களாக பனைக் குற்றிகளே போடப்பட்டன. இந்த படிக்கட்டை அமைப்பதற்கு பங்களார்கள் எவரும் முன்வராத காரணத்தால் எனது தந்தை தனது சொந்த செலவில் அதனை அமைத்துத் தந்தார்.

எனது தந்தையின் மறைவுக்கு (1979) பின் கிணறு பயன்பாடற்ற நிலைவரை நான் எனது சொந்தச் செலவில் எனது தந்தையின் பணியை தொடர்ந்து மேற் கொண்டு வந்தேன். ஏனைய பங்காளர்களோ உடல் உழைப்பு வழங்கியதாக குறிப்பிடப்படுபவர்களோ அதனைச் செய்ய முன்வரவில்லை.

கிணற்றை பயன்படுத்திய அனைவரும் கிணற்றின் கிழக்குப் பக்கமாக அமைந்துள்ள பிரதான பாதையில் இருந்து கிணற்றுக்கு வடக்குப்பக்கமாகவும் தெற்குப் பக்கமாக வந்து கிணற்றை பாவிக்கக் கூடிய போதியளவு வசதி இருந்தும் காணி ஒன்றின் ஊடாக பாதை விட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டது மிகவும் வேடிக்கையானது.

கிணற்றுக்கான பயன்பாடு முடிவுக்கு வந்து பல ஆண்டுகள் ஆன பின்புமும் அதைப் பற்றிப் பேசுவதோ அல்லது எழுதுவதோ முட்டாள்தனமானது மட்டுமல்ல அறிவார்ந்த செயலும் ஆகாது.

அப்படித்தான் பேசுவோம் எழுதுவோம் என பிடிவாதம் பிடிப்போம் எனின் அது எங்கள் வாரிசுகளின் மத்தியில் பகை உணர்வை ஏற்படுத்தும் என்பது மட்டுமல்ல நிரந்தரமான பிரிவையும் ஏற்படுத்தும்.

ஒருவரைப் பற்றிய அல்லது ஒன்றைப் பற்றிய வரலாற்றை எழுதும் போது அதன் ஆரம்பம், வளர்ச்சி மற்றும் தற்போதைய நிலை தொடர்பான சரியான தகவல்கள் சேகரிக்கப்பட்ட பின்னரே எழுதவேண்டும் என்பதை புரிந்து கொள்ளாதவர்கள் வரலாற்றை எழுதுவது என்பது ஏற்புடையதல்ல. வரலாற்றை சரியாக எழுதாவிட்டால் அதனை திரித்துக் கூறுவதற்கு ஒப்பானதாகும்.

ஒருவர் மையக் கருவொன்றை தனது கற்பனை வளம் மற்றும் எழுத்தாற்றலை அடிப்படையாக கொண்டு சிறுகதைகளை எழுதலாம் நாவல்களை எழுதலாம்; கவிதைகளைக் கூட படைக்க முடியும்; ஆனால் வரலாற்றை எழுதமுடியாது.

ஒருவர் தனது உடலுழைப்பை வழங்கியமைக் காக கிணற்றுக்கு செல்வதற்கான பாதை வழங்குவதற்கு சம்மதிக்கப்பட்டதாக அக்கட்டுரையில் பதிவு செய்யப்

பட்டுள்ளது. அது முற்றிலும் தவறானது அவரைத்தவிர இன்னும் இரண்டு பேர் தங்களுக்கு கிணற்றில் உரிமை வழங்குமாறு கேட்டிருந்தார்கள்.

அவர்கள் எல்லோருடைய கோரிக்கைகளும் நிராகரிக்கப்பட்டன. அக்கோரிக்கைகளை நான் முன் நின்று வன்மையாக எதிர்த்தேன். இந்தக்கிணற்றில் அவர்களுக்கு உரிமை கோருவதற்கு எந்தவித தார்மீக உரிமையும் இல்லை என்பதனை வெளிப்படுத்து கின்றேன்.

இக்கிணற்றை பயன்படுத்திய அனைவரினது வீடுகளிலும் தற்போது ஆழ்துளைக் கிணறுகளும் நீர் வழங்கல் சபையினால் வழங்கப்படும் குழாய் நீர் வசதிகளும் உள்ளன. இதனால் இக்கிணறு பயன் பாடற்ற நிலைக்கு உள்ளானது. இதனால் காலப் போக்கில் இக்கிணறு பாழடைந்து அதன் கிழக்கு புறமாக உள்ள பிரதான பாதையும் சுற்றாடலில் உள்ள வீடுகளும் பாதுகாப்பற்ற நிலைக்கு தள்ளப்படும். எனவே இக்கிணறு முற்று முழுவதுமாக தூர்க்கப்பட வேண்டும் என்பதில் நான் மிகவும் உறுதியாக இருக்கின்றேன்.

“தன்னைக் கொல்லவரும் பசுவையும் கொல்லலாம்” என்பது ஆபத்துக் கால தர்மம் ஆகும். எனவே இக்கிணறு நம் முன்னோர்களின் இருப்பைச் சொல்லும் நினைவுச் சின்னமாக இருப்பினும் அதனைத் தூர்ப்பதில் தீமை எதுவும் இல்லை; அது நன்மையினையே பயக்கும். எனவே சான்றோர்களின் ஆபத்துக்கால விதிகளின் படி தர்மங்களை கடைப் பிடித்தலும் இன்றியமையாத ஒன்றாக விளங்கு கின்றது.

நீண்ட காலத்துக்கு முன்னர் எது கிராமமக்கள் மட்டுமன்றி ஏனைய கிராமத்து மக்களும் புதிய வீடுகள் கட்டுவதற்கான நிலையம் எடுப்பதற்கும் கிணறுகள் வெட்டுவதற்கான நிலையம் எடுப்பதற்கும் சுப காரியங்களுக்கு உரிய நாட்களை கணிப்பதற்கும் எமது ஊரில் வாழ்ந்து மறைந்த கவிஞர் மு.செல்லையாக அவர்களையும் பிரபல சோதிடர் ச.தம்பிஐயா அவர்களையும் நாடிவந்ததை நான் நன்கு அறிவேன். அந்த வீடுகளில் வாழ்ந்தவர்களும் இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பவர்களும் மிகவும் சிறப்பாகவே வாழ்ந்து கொண்டிருப்பதை நான் கண்கூடாகப் பார்க்கின்றேன்.

இதன் மூலம் மேற்குறிப்பிட்ட இருவரினதும் சோதிடம் பொய்க்கவும் இல்லை என்பது மட்டுல்ல அவர்களின் சோதிடக் கணிப்பு தவறவும் இல்லை என்பது நிதர்சனம். நாங்கள் பாடசாலைக் காலத்தில் பாடப்புத்தகத்தில் படித்த, உ.வே.சாமிநாதசர்மா அவர்களின் சோதிடம் பொய்யாகுமா? என்ற கதைதான் ஞாபகத்துக்கு வருகிறது.

குறிப்பு:
நாங்கள் பத்திரிகை ஆவணப்படுத்தலை மாத்திரம் நோக்கமாகக் கொண்டு வெளி வருகின்றது. தயவு செய்து ஆக்கங்களை அனுப்புபவர்கள் இப்பத்திரிகைக்கு பிரச்சினையான விடயங்களை அனுப்ப வேண்டாம். மேற்குறிப்பிட்ட "மூன்றாம் பனையடி கிணறு" தொடர்பான பதிவுகள் இனி இப்பத்திரிகையில் தொடர இடமளிக்கப்பட முடியாது உள்ளது என்பதை வருத்தத்துடன் தெரிவித்து கொள்கின்றோம்.. தயவு செய்து முழுமையான தகவல்கள், ஆதார பூர்வமான தகவல்களுடன் ஆவணப்பதிவுகளை மேற்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். இப்பத்திரிகையின் தலைப்பின் கீழ் “ஒற்றுமையே எமது பலம்” என ஒரு தடவை குறிப்பிட்டிருந்தோம். அந்த வகையில் ஒற்றுமையை குலைக்கும், முரண்பாடுகளை ஏற்படுத்தும் விடயங்களை தயவு செய்து அனுப்ப வேண்டாம். அத்துடன் அவற்றை பிரசுரிக்கவும் மாட்டோம்.

- ஆசிரியர்


கிரிகேஸ்வரன் ரத்னாங்கி தம்பதியினருக்கு 2022.2.08 அன்று அத்விகன் என்னும் மகன் பிறந்துள்ளார். எமது ஊருக்கு புதியதொரு அங்கத்தவர் இணைந்துள்ளார்.

அருந்தவராஜா ஜனார்த்தனி தம்பதியினருக்கு 2022.3.07 அன்று லக்ஷ்மிகா என்னும் மகள் பிறந்துள்ளார். எமது ஊருக்கு புதியதொரு அங்கத்தவர் இணைந்துள்ளார்.

பிரதாப் தர்ஷனா தம்பதியினருக்கு 2022.3.30 அன்று கிருத்திக் என்னும் மகன் பிறந்துள்ளார். எமது ஊருக்கு புதியதொரு அங்கத்தவர் இணைந்துள்ளார்.

## சிவராத்திரி நிகழ்வு - 2022

அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயில் சிவராத்திரி தினம் 1.3.2022 அன்று வெகு சிறப்பாக நடைபெற்றது. ஆலய அர்ச்சகர் திரு. ப. இரத்தினேஸ்வரன் குகன் ஐயா அவர்கள் மங்கள விளக்கேற்றி நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார். தலைமையுரையை திரு ச.செல்வானந்தன் நிகழ்த்தினார். செல்வன் சு.ஜெய்ஷாமின் பேச்சும், செல்வி ந.அஜிக்ஷா, செல்வி ம. தக்சிதாவின் நடனமும், அதனைத் தொடர்ந்து திருமதி விசிந்தன் சரண்யா நெறியாள்கையில் “காத்தவராயன்” சிந்துநடைக்கூத்தும், கண்ணன் நாடகமன்றத்தினரால் திரு சி.தங்கமயில் நெறியாள்கையில் “அரிச்சந்திரா“ மயான காண்டம் நாடகமும், கவிஞர் நாடக மன்றத்தினரால் செ.யோகதாஸ், ம.தவேந்திரன் நெறியாள்கையில் “மாவீரன் பண்டாரவன்னியன்“ வரலாற்று நாடகமும். அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலய அறநெறி பாடசாலை மாணவர்களின் பட்டிமன்றமும் நடைபெற்றது. நன்றியுரையை திரு ந.யோகரத்தினம் நிகழ்த்தினார்.



# கட்டடக்கலைஞரும் உதைபந்தாட்ட நட்சத்திர வீரரும், ஆன்மிக வாதியுமாகிய க.பாக்கியராசா(மாலி)

■ க.பரணீதரன்

க.பாக்கியராசா அவர்கள் 1940.12.01 இல் எமது ஊரின் நுழை வாயிலில் அமைந்துள்ள மடத்துக் கடவைக் குறிச்சியில் பிறந்தார். கணபதிப்பிள்ளை பார்வதி தம்பதி யினருக்கு இவர் மூன்றாவது பிள்ளையாக பிறந்தார். இவருக்கு சதாசிவம், மகாமணிதேவி, செல்வ ராசா, மகேந்திரராசா, விநாயக ராசா, ஸ்ரீமணிதேவி ஆகியோர் சகோதரங்களாக வாய்த்தனர். இளமைக்காலம் முதல் இன்று வரை நிதானமான, கீழ்படிவான வாழ்க்கையை வாழ்ந்து வருபவர் க. பாக்கியராசா அவர்கள். யா/தேவரையாளி இந்துக் கல்லூரி யில் கவிஞர் மு. செல்லையா அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் ஆரம்ப கல்வியை(1-5)



பெற்றுக் கொண்ட இவர் 6 ம் வகுப்பு முதல் திரு இருதயக்கல்லூரியில் கற்றார். பின்னர் மீண்டும் சாதாரணதரம் கற்க தேவரையாளி இந்துக் கல்லூரிக்கே திரும்பினார். பாடசாலைக்காலத்தில் ஆசிரியர்களுக்கு கீழ்படிவான மாணவனாக தன்னை இனங்காட்டி கொண்டார். இதனால் இவரது ஆசிரியர்களுக்கு இவர் பிடித்த மாணவனாக விளங்கினார். ஆ.ம.செல்லத்துரை, கவிஞர் மு. செல்லையா, கந்த முருகேசு, சைவப் புலவர் சி. வல்லிபுரம் போன்றோரிடம் இவர் கல்வி கற்றதோடு அவர்களது வழிகாட்டல்களையும் பின்பற்றினார். மேலும் கே.டி.மாணிக்கம், ஆ.கதிரவேல் போன்றோரின் வழிகாட்டல்களும் இவரது வாழ்க்கைப் பயணத்தில் பெரும் பங்காற்றின.

கல்வியுடன் விளையாட்டில் மிகுந்த ஈடுபாடு உடையவராக விளங்கினார். பாடசாலைக் காலத்தில் பாடசாலை உதைபந்தாட்ட அணியில் அங்கம் வகித்தார். இவரது தனித் திறனை அவதானித்த வதிரியை சேர்ந்த இரத்தினசிங்கம் மாஸ்ரர் இவருக்கு Coaching கொடுத்து இவரது உதைபந்தாட்டத் திறனை மேலும் மெருகூட்டுவித்தார்; உதை பந்தாட்ட நுணுக்கங்களை இவருக்கு கற்பித்தார். இவரது உதைபந்தாட்ட தனித்திறமை காரணமாக யாழ்ப்பாணத்தின் பல்வேறு அணிகளுக்காகவும் விளையாடும் சந்தர்ப்பங்கள் இவருக்கு கிடைத்தன. கிடைத்த சந்தர்ப்பங்களை சரியாகப் பயன்படுத்தி மிகச்சிறப்பாக தன் திறமைகளை வெளிப்படுத்தி யாழ்மாவட்டத்தின் சிறந்த நட்சத்திர உதைபந்தாட்ட வீரராக திகழ்ந்தார். 14 வயதில் திரு இருதயக்கல்லூரிக்காக விளையாட ஆரம்பித்த இவரது உதைபந்தாட்டப்பயணம் 47 வயது வரை மனோகரா அணிக்காக தொடர்ந்தது. மனோகரா அணியின் பிரபல வீரர்களான Dr.சாம்பசிவம், இரத்தினராசா, திரவியம், நாகேந்திரன். ராசரத்தினம், கந்தவனம், இராசநாயகம், மகேந்திரராசா, துரைராசா(பீற்றர்) போன்றோருடன் இணைந்து மனோகரா அணிக்காக விளையாடியவர். மனோகரா அணியின் நட்சத்திர வீரராக பல ஆண்டுகளாக திகழ்ந்த இவர் மனோகராவின் பல வெற்றிகளுக்கு காரணகர்த்தாவாக இருந்ததோடு பல்வேறு வெற்றிக் கேடயங்களையும் பெற்றுக் கொண்டார்.

இளம்பராயத்திலே மற்றவர்களுக்கு சிறு சிறு உதவிகளை செய்வதில் பெரிதும் உவகை அடைந்தார். பலரது வீடுகளை வேய்வதற்கு உதவினார். மேசன் மயிலு, சுப்பிரமணியம் போன்றவர்களிடம் மேசன் தொழிலைக் கற்றுக் கொண்டார். மேசன் கிருஷ்ணபிள்ளை, குகதாசன்

போன்றோருடன் இணைந்து மேசன் தொழிலை நீண்ட காலமாக செய்து வந்தார். 1985 ஆம் ஆண்டு முதன்முதலில் புலோலி மெ.மி.த.க. பாடசாலையில் இவர் முதன் முதலாக மேசன் வேலை செய்ய ஆரம்பித்தார். தொடர்ந்து பல இடங்களில் மாடிக்கட்டடங்கள், கோயில்கள். கடைகள். வீடுகள், கிணறுகள் என்பவற்றை மிக நுணுக்கமாகவும் சிறப்பாகவும் கட்டிக் கொடுத்து சிறந்ததொரு மேசன் என்ற பெயரை பெற்றுக் கொண்டுள்ளார். தற்போதும் தன்னால் இயன்ற சிறு சிறு வேலைகளை செய்து கொண்டு இருக்கின்றார். வயதைக் கண்டு பயப்பிடாமல் தொடர்ந்து மனத் தைரியத்தோடு தன்னால் இயன்ற தொழில்களை செய்து கொண்டு வருகின்றார்.



இவரை பலரும் “மாலி” என்றே அழைப்பதே வழக்கமாக உள்ளது. அத்தாய் பிரதேசத்தில் எம்மவர்களது 5 வீடுகள் இருந்தன. அதில் ஒன்று இவரது தந்தைக்கு சொந்தமானது. அந்த வகையில் இவர்கள் மாலி சந்தி பிள்ளையார் ஆலயத்தில் மிகுந்த பற்றுடையவர்களாக விளங்கினார்கள். இவரது பெற்றோர் மாலி சந்திப் பிள்ளையாருக்கு நேர்த்தி வைத்து இவரைப் பெற்றெடுத்த காரணத்தால் இவரை “மாலி” என்று செல்லமாக அழைத்தார்கள். அதுவே பலரும் இவரை அழைக்கும் பெயராக பின்னாளில் மாற்றம் கண்டது. பாக்கியராசா என்ற பெயரை விட பலருக்கு “மாலி” என்ற பெயரே புழக்கத்தில் உள்ள பெயராக உள்ளது. மாலி சந்திப்பிள்ளையார் ஆலயத்தில் அந்நாளில் இவர் களுக்கு ஒரு திருவிழாவும் காணப் பட்டது. 1967 ஆம் ஆண்டு மீனாட்சி அம்மா அவர்களை காதல் திருமணம் செய்து கொண்ட இவர் இன்று வரை தனது மனைவியில் பற்று உடைய வராக விளங்கி வருகின்றார்.



ஆன்மிகத்தில் அதிக நாட்டம் கொண்டு தேவாரங்களை மனப்பாடம் செய்து கேள்விஞானத்தால் அவற்றை பாடி வருகின்றார். கோயில்களில் திருவிழாக்கள், விசேட விழாக்கள், திருவாசக முற்றோதல்கள் போன்றவற்றில் இவர் தேவார திருவாசகங்களை படித்து வருகின்றார். தேவாரங்கள் இரசித்து ருசித்து பாடும் வல்லமை உடையவர். தீட்சை பெற்ற இவர் கோயில்களுக்கு செல்லும்போது, எப்போதும் தீட்சை அணிந்து கொண்டே செல்வார்.

1967 இல் இருந்து அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலய அங்கத்தவரா இருந்து வருகின்றார். மனோகரா சனசமூக நிலையத்தின் தலைவராக, அல்வாய் சாமாணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலய முகாமையாளராக இருந்து பல்வேறு சமூக சேவைகளையும் புரிந்துள்ளார். நல்லதொரு இசை நாடக இரசிகனாக இருந்து வருவதோடு, இசைநாடக கலைஞர்களை தன் ஊக்கமூட்டும் வார்த்தைகளால் ஊக்கப்படுத்தி வருகின்றார்.

வயது 80 ஐ த்தாண்டிய நிலையில் மனோகரா விளையாட்டுக் கழகத்தால் அண்மையில் நடாத்தாப்பட்ட MPL போட்டியில் உதைபந்தாட்ட அணியொன்றுக்காக களமிறங்கி அனைவரையும் அசர வைத்தார். இவரது 75 ஆவது வயதை முன்னிட்டு இவருக்கு ஒரு சிறப்பு மலரை வெளியிட்டு இவரது உறவுகள் மகிழ்ந்தார்கள். அல்வாய் மனோகராக் கிராமத்தின் சிறந்த நட்சத்திர உதைபந்தாட்ட வீரராக, ஆன்மிக வாதியாக, கட்டக் கலைஞராக சிறப்புற்று நிற்கும் க.பாக்கியராசா அவர்கள் எல்லோருடனும் இனிமையாக பழகும் இயல்பும் உடையவர். கோயில் சார்ந்த விழாக்கள் அனைத்திலும் இவர் பிரசன்னமாகி இருப்பார். மனோகராவின் தீவீர உதைபந்தாட்ட ஆர்வலராகவும் பல சமூக முன்னேற்ற சேவைகளை யும் மனோகராக் கிராமத்துக்காக ஆற்றியவராகவும் விளங்குகின்றார்.





யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 35வது பொதுப் பட்டமளிப்பு விழாவில் திருமதி சித்திரகலா வித்யாபதி M.Ed-(Second upper) முதுகல்விமாணி பட்டத்தை பெற்று எமது ஊருக்கு பெருமை சேர்த்துள்ளார்.



மாலபே இலங்கை தகவல் தொழில் நுட்ப பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் செல்வன் கலாமணி மதனாகரன் B.Sc(Hons) in Information Technology Specialized in cyber security விஞ்ஞானமாணி பட்டத்தை பெற்று எமது ஊருக்கு பெருமை சேர்த்துள்ளார்.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 35வது பொதுப் பட்டமளிப்பு விழாவில் செல்வன் செல்வநாதன் சுதர்ஸ்மன் B.Com பட்டத்தை பெற்று எமது ஊருக்கு பெருமை சேர்த்துள்ளார்.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 35வது பொதுப் பட்டமளிப்பு விழாவில் திருமதி கீதாஞ்சன் கல்யாணி B.A கலைமாணி பட்டத்தை பெற்று எமது ஊருக்கு பெருமை சேர்த்துள்ளார்.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 35வது பொதுப் பட்டமளிப்பு விழாவில் திரு.நவரத்தினம் நதீஸ்வரன் B.A கலைமாணி பட்டத்தை பெற்று எமது ஊருக்கு பெருமை சேர்த்துள்ளார்.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 35வது பொதுப் பட்டமளிப்பு விழாவில் திருமதி ஆதவன் துஷ்யந்தி B.A கலைமாணி பட்டத்தை பெற்று எமது ஊருக்கு பெருமை சேர்த்துள்ளார்.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 35வது பொதுப் பட்டமளிப்பு விழாவில் செல்வன் வெற்றிவேல் சிந்துஜன் B.FA நுண்கலைமாணி (கர்நாடக சங்கீதம்) பட்டத்தை பெற்று






தி.ஞானசேகரன் அவர்களின் 80 ஆவது அகவையை முன்னிட்டு ஞானம் சஞ்சிகையால் நடாத்தப்பட்ட ஈழத்தின் சிறந்த சஞ்சிகைக்கான போட்டியில் எமதூரில் இருந்து க.பரணீதரன் அவர்களால் வெளியிடப்படும் "ஜீவநதி" சஞ்சிகை முதலாம் இடத்தினைப் பெற்று எமது ஊருக்கு பெருமை சேர்த்துள்ளது.



கடந்த 2019 இல் அகில இலங்கை ரீதியிலான பல்கலைக்கழக உயரம் பாய்தல் போட்டியில் 3 ம் இடத்தை பெற்றமைக்காகவும், வலைப்பந்தாட்ட போட்டி,கரப்பந்தாட்ட போட்டி ஆகியவற்றில் சிறந்த விளையாட்டு வீராங்கனை என்ற விருதை தனதாக்கியமைக்காகவும், முதலாம் வருட மாணவர்களில் சிறந்த விளையாட்டு வீராங்கனை (Fresh Women) என்ற விருதை சாகித்யா கமலநாதன் அவர்கள் பெற்று எமது ஊருக்கு பெருமை சேர்த்துள்ளார்.

எம்மவர்கள் சிறுகதை - 3

# வேட்டையாடு விளையாடு

■ து.சதீஷ்

எங்கும் ஒரே களேபரம். எல்லோரும் சுறுசுறுப்புடன் இயங்கிக்கொண்டிருந்தார்கள். நேரத்துடன் நித்திரை விட்டெழுந்து குளித்து நல்ல உடை உடுத்திக்கொண்டு வளாகம் நோக்கி ஓட்டமும் நடையுமாக விரைந்துகொண்டிருந்தார்கள். அன்று புது மாணவர்கள் வரும் நாள். அது தான் இத்தனை சுறு சுறுப்பு. பொதுவாகவே பொறியியல் மாணவிகளை “காய்ந்தது கள்” என்று தான் சொல்லுவார்கள் - கணக்கிலே மட்டுமே கவனம் செலுத்துவதனாலோ என்னவோ. அத்தி பூத்தால் போல சிலர் மட்டும் விதிவிலக்காக வருவதுண்டு. அப்படித் தான் ஒருத்தியும் இந்த முறை வருவதால் தான் இத்தனை ஆர்ப்பாட்டம்.

சிரேஷ்ட மாணவர்களிடையே இரு பிரிவு. பகிடிவதை ஆதரவாளர்கள், எதிராளர்கள். இரு பகுதியினரும் தங்கள் பக்கத்திற்கு ஆள் பிடிக்கும் வேலையில் மிகவும் தீவிரமாக ஈடுபட்டுகொண்டிருந்தனர். மிக முக்கியமாக “அந்த அவளை” எப்படியும் தம் பக்கம் இழுத்து விட வேண்டும் என்பதில் மிக மிக கவனமாக இருந்தனர்.

புது மாணவர்கள் வரத்தொடங்கிவிட்டார்கள். மொத்தம் 400 மாணவர்களில் 10 சதவீதந்தான் தமிழ் மாணவர்கள்.

எனவே கூட்டத்தில் தமிழ் முகச்சாயல் உள்ளவர்களின் பக்கத்தில் போய் அவர்கள் தமிழ்தான் என்று உறுதிசெய்து, அவர்களை ஓரம் கட்டுவதில் இருபகுதியினரும் மிக மும்முரமாக ஈடுபட்டுகொண்டிருந்தனர். இருப்பினும் பலருக்கு “அந்த அவளை” கண்டுபிடிப்பது தான் முக்கியமாக இருந்தது.

அந்தோ, ஒருவன் கண்டுபிடித்துவிட்டான். “மச்சான் அங்கை பாரடா. அவள் தான் நான் சொன்ன ஆள்” என்று கண்களால் காட்டி கொடுத்துவிட்டு அங்கிருந்து நகர்ந்து விட்டான். காட்டிகொடுப்பதில் தான் எவ்வளவு சந்தோசம்! அவர்களில் ஒரு வீரன் - ஆம் பெண்களுடன் கதைப்பதையே வீரமாக எண்ணுபவர்களும் உண்டல்லவா.

அப்படிப்பட்டவர்களில் ஒருவன் - அவளை அணுகி, “எக்ஸ்கியுஸ் மீ, நீங்கள் தமிழா?” அவளும் “ஆம்” என்று தலையாட்டினாள். “நாங்கள், எல்லா தமிழ் ஜுனியர்சையும் ஒரு இடத்தில வைத்து கதைக்க வேண்டும். நீங்களும் அந்த கிரௌண்ட்ஸ் பக்கமாக போங்கோ” என்று கூறியதோடு நின்று விடாமல் “ஒன்றுக்கும் யோசியாதையும். நான் எல்லாத்தையும் பார்த்து கொள்ளுகிறேன்” என்று மெல்லிய குரலில் குழைந்தான். இல்லையில்லை வழிந்தான் என்று சொல்லுவதே பொருந்தும். அவளும் எதுக்கு வம்பு என்று அவர்கள் சொல்லிய இடம் நோக்கி நடந்தாள். வழியில் எதிர்ப் “பார்டி” ஒருவன் குறுக்கிட்டு “ஹல்லோ ஹொவ் ஆர் யு. நீர் அங்கை போக வேண்டாம். அவங்கள் ரொம்ப மோசமா நடந்துவாங்கள். இங்கை ராக்கிங் வாங்க வேண்டிய அவசியமில்ல. அதையும் மீறி ஏதாவது செய்தாங்கள் என்றால் எனக்கு சொல்லும். நான் அவங்களை ஒரு வழி பண்ணுறன்” என்று வீர வசனம் பேசி பல்லிளித்தான். “ஓம் நான் அப்படியே செய்யிறன்.” சொல்லிவிட்டு அங்கிருந்து கழன்று கொண்டாள். இவனுக்கோ பெரிய வெற்றி கிடைத்த சந்தோசம்.

அப்படியே திரும்பி தனது சிங்கள நண்பனிடம் 'You know.. those people are village people. They don't know how to behave..” என்று சொல்லிக்கொண்டே போனான். 90இல் சண்டை மறுபடியும் தொடங்கியதும் கொழும்புக்கு ஓடி வந்து இன்னமும் 5 வருடமும் ஆகவில்லை அதற்குள் city boy ஆகிவிட்டவனின் பேச்சுத்தான் அது.

அங்கிருந்து நகர்ந்து சென்றவளை, சகமாணவன் ஒருவன் எதிர்கொண்டு சமாளித்துப் பேசி மைதானம் நோக்கி கூட்டிச்சென்றான். சிரேஷ்ட மாணவர்களின் நாடித்துடிப்பு தெரிந்தவன். இப்போது மைதானத்தின் ஒரு மூலையில் அனைத்து புதிய தமிழ் மாணவர்களும் சிரேஷ்ட மாணவர்களால் சூழப்பட்டிருந்தார்கள். இப்போது சுற்றி நிற்பவர்கள் எல்லோரும் வீரர்கள். சூழப்பட்டவர்கள் கோழைகளாக்கப்பட்டவர்கள், ராக்கிங் என்ற பெயரால். தமிழில் உள்ள அத்தனை கெட்ட வார்த்தை களும் அங்கு சரளமாகப் பாவிக்கப்பட்டன. பலர் “அந்த அவளுக்கு” கேளாத மாதிரி மற்றவர்களைப் பேசிக்கொண்டு இருந்தார்கள். இமேஜ் பாழாகிவிடாதபடி மிகவும் கவனமாக நடந்து கொண்டார் கள். சிறிது நேரத்திற்கெல்லாம் தனித்தனியே “கவனிப்பு” தொடங்கி விட்டது. எல்லோரது போட்டியும் எப்படியும் “அந்த அவளை” தனியே கூட்டிச்சென்று தங்கள் இமேஜை உயர்த்தி காட்டிவிட வேண்டும் என்பதே குறியாக இருந்தது. அந்த இடத்தில் அவளைத் தவிர அனைவரும் பயந்தபடியே இருந்தனர். அல்லது பயந்த மாதிரி நடித்து கொண்டாவது - சீனியர்ஸ் எதிர்பார்ப்பது இதைத் தானே - அவள் மட்டும் சிரித்து சிரித்து கதைத்துக்கொண்டு இருந்தாள்.

இப்படியே சிரித்துச் சிரித்து “ராக்கிங்” காலம் முழுவதை யும் எதுவித பிரச்சினையும் இன்றி கடத்திவிட்டாள். இந்தக் காலத்தில் அவளைப் பலபேருடன் சேர்த்து வைத்தது வதந்தி தானே தவிரவும் உண்மை அல்ல. அதே நேரம் “எட்டாப் பழம் புளிக்கும்” என்பது போலவும் பலர் விலகிவிட்டனர். விலகியவர்கள் சும்மா இருந்தால் பரவாயில்லை. அவளைப் பற்றிப் பலவாறாகக் கதையும் கட்டத் தொடங்கிவிட்டார்கள். அது மட்டுமா... புத்தகப் பூச்சிகளான சிலரைப் பிடித்து, புத்தகம் தவிரவும் உலகில் வேறு என்னவெல்லாம் நடக்குது என்று உசுப்பேத்தத் தொடங்கி விட்டனர். “மச்சான் அவளை பாத்தியே. உன்னைப் பார்த்துத் தான் சிரிக்கிறாள். அவளுக்கு உன்னில ஒரு இது போல தான் கிடக்கு” என்று ஒருவன் கூற, அதை ஆமோதிப்பதற்கு என்று ஒரு கூட்டம். இப்படி ஒருவரை உசுப்பேத்தினாலும் பரவாயில்லை.

மூன்று நான்கு வடிகட்டிய புத்தகப் பூச்சிகளைப் பிடித்துக் குழைக்கடித்து விட்டார்கள்.

அது நாள் வரையில் நிலத்தையே பார்த்து திரிந்தவர்கள், இப்போது அவளைக் கடைக் கண்ணால் பார்க்கத் தொடங்கி விட்டார்கள். எப்போதும் போலவே அவளும் சிரிப்புடன் கடந்து செல்வாள். அது அவர்களுக்கு நண்பர்கள் (?) கூறியதை வழிமொழிவதாக தென்பட்டது. பாவம் அவர்களும். அது நாள் வரையில் தங்களை அலங்கரிக்காமல் புத்தகத்துடன் வாழ்க்கை நடத்தியவர்கள், இப்போது கண்ணாடி முன்னால். நாள் முழுவதும் புத்தகத்துள் மூழ்கியிருந்தவர்கள் இப்போது நாள் முழுவதும் தங்களை அலங்காரம் செய்வதில் மும்முரமாக இறங்கிவிட்டார்கள். இவர்களின் இந்த மாற்றத்தை அவதானித்த நண்பர்கள் மேலும் மேலும் "ஏற்றி" விடத் தொடங்கிவிட்டார்கள். அவர்களின் நினைப்பு எல்லாம், இவர்களைக் கொண்டு "லவ் லெட்டர்" கொடுக்க வைத்து அவளை அவமானப்படுத்த வேண்டுமென்பதே. அவர்களின் நினைப்பு என்னவென்றால் இவர்கள் "பேக்குகள்," தாங்கள் "ஹீரோக்கள்." "பேக்குகள்" பார்க்கிற அளவில் தான் அவள் இருக்கிறாள் என்று அவள் உணர வேண்டுமென்பதே.

ஒருவாறாக உசுப்பேத்தியவர்களைக் கொண்டு "லெட்டர்" குடுக்கும் அளவிற்கு அவர்கள் வெற்றியும் பெற்று விட்டார்கள். வந்தது வினை. பெண்களை நிமிர்ந்து பார்க்கக் கூடத் தைரியம் இல்லாதவர்கள், இப்போது கடிதமும் கையுமாக அலையத் தொடங்கிவிட்டார்கள். இருந்தும் அவர்களுக்குத் தாங்களே நேரில் சென்று கடிதம் கொடுக்க இன்னும் தான் தைரியம் இல்லை. எனவே தங்களின் மிக நெருங்கிய (அப்படி தான் ந நம்பிக்கையான ஒருவரிடம் கடிதத்தை கொடுத்து விட்டு, நம்பிக்கையுடன் காத்திருந்தார்கள். ஒவ்வொரு கடிதத்தையும் பெற்றவள், கொஞ்சம் ஆடித் தான் போய்விட்டாள். ஒருவாறு தன்னை சுதாரித்தவளாய், கடிதம் கொண்டு வந்தவர்களின் குசும்புக்கு ஏற்றவாறு பதில்களை சூடாகவும் குளிராகவும் அனுப்பி வைத்தாள்.

தரகு வேலை பார்த்தவர்களோ, இப்போது "தண்டோரா" அடிப்பவர்களாக மாறிவிட்டார்கள். ஒரு கல்லில் இரண்டு மாங்காய் என்பார்களே, அதுவே தான். "அவளை" மட்டம் தட்டுவதுடன், "அப்பாவிகளை" மேலும் மிதிப்பதற்கு இன்னுமொரு "topic" கிடைத்த சந்தோசம். அடுத்த "get-togther" இல் நையாண்டி பண்ணுவதற்கு நல்ல அவல் கிடைத்த சந்தோசம். அந்த "அப்பாவி பலிக்கடாக்கள்" தான் பாவம். மிகவும் மன முடைந்து போய்விட்டார்கள். அடுத்து என்ன செய்வதென்றே தெரியாத புத்தக பூச்சிகள். மரம் விட்டு மரம் தாவும் மந்திகளாக மாறவும் தெரியாதவர்கள். அப்படியே அறைக்குள் அடங்கி விட்டார்கள். ஒருவனைத் தவிர. அவன் மனம்கூட பாதிக்கப்பட்டு விட்டது. "அபிராமி அபிராமி" என்று சொல்லித்திரியும் கமல ஹாசன் லெவெலுக்கு. அதிரடியாக பல காரியங்கள் செய்யத் தொடங்கிவிட்டான்

"குணா" படக் கமலஹாசன் போல மாறியவன், தனது கனவிலே அம்மன் தோன்றுவதாகவும், அந்த அம்மன் வேறு யாருமல்ல "அந்த அவளே" என்றும் கூறிக்கொண்டும் எப்போதும் அவளை எதிர்கொள்ளும் வகையில் வலம்வர ஆரம்பித்து விட்டான். ஏதோ எதேச்சையாக தான் அவன் தன் முன்னால் அடிக்கடி வருவதாக எண்ணிய அவள்,

முதலில் அதை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. ஒரு நாள் அவனை நேருக்கு நேர் பார்க்கும் சந்தர்ப்பத்தில் தான் அவனது முகத்தில் ஒரு மாறுதலை அவனது சிரிப்பினூடாக கண்டாள். இருப்பினும் அதை கண்டு கொண்டதாக காட்டிக் கொள்ள வில்லை.

முதல் தவணை விடுமுறைக்காக அவள் ஊருக்குச் சென்று விட்டாள். அது அவனுக்கு பரீட்சை காலம்.

அவளின் தரிசனமின்றி அவனால் படிப்பில் சரியாக கவனம் செலுத்த முடியவில்லை. ஏதோ ஒப்பிற்கு பரீட்சை எழுதினான். இன்னும் இரு பாடங்கள் தான் மிச்சம். இருப்பினும் முடியவில்லை அவனால். காலையில் நித்திரையால் எழுந்தவன், பயணப் பையை அடுக்கிக்கொண்டிருந்தான். "மச்சான் என்னடா செய்கிறாய்" என்று கேட்ட அறை சகபாடியிடம், "ராத்திரி அம்மன் கனவில் வந்து சொன்னவ, exam postpone பண்ணப் போறாங்களாம். ரெண்டு மாசம் கழிச்சு தான் மற்ற ரெண்டு பாடமுமாம். அது தான் நான் வீட்டை வெளிக்கிடுறன். நீயும் வாறதெண்டால் சொல்லு நான் வெயிட் பண்ணுறன்" என்று கூறிக்கொண்டே பயணத்திற்கு ஆயத்தமாகிக் கொண்டு இருந்தான். விபரீதத்தை உணர்ந்து கொண்ட நண்பன், அவனை ஆசுவாசப்படுத்த பகீரதப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தான். அவன் ஒன்றையுமே செவிமடுப்பதாகவில்லை. இதற்கிடையில் கதை அடுத்தடுத்த அறைகளிற்கு பரவ, அவர்களும் தங்கள் பங்கிற்கு அவனை தடுத்தனர். எவரையும் சாட்டை செய்யாத வன், தன் பாட்டிற்கு வெளிக்கிட்டுச்சென்றுவிட்டான்.

ஒரு வருடம் கழித்து ஊருக்கு வந்த மகனைக் கண்ட சந்தோசம் ஒரு பக்கம், மகன் இளைத்து விட்டான் என்ற கவலை ஒரு பக்கமுமாக தாயும் தந்தையும் அங்கும் இங்குமாக ஓடிக் கொண்டிருந்தனர். மகனுக்கு நல்ல சாப்பாடு கொடுத்து தேற்ற வேண்டும் என்பது அவர்கள் கவலை. அவனோ வந்த களைப்பு மாறு முன் சைக்கிளையும் எடுத்துக் கொண்டு, "அம்மா நான் ஒருக்கால் யாழ்ப்பாணம் போயிட்டு வாறன். பின்னேரம் ஆகும் வர" என்று கூறியவாறு ஓடிக்கொண்டிருந்தான். "இப்ப தானே தம்பி வந்தனி. எதுவும் தேவையென்றால் நாளைக்கு போகலாம் தானே" என்று தாய் கூறியது அவனின் காதில் விழுந்ததோ தெரியாது. அதற்குள் அவன் புறப்பட்டு விட்டான்.

எப்படியாவது "அவளின்" வீட்டை தெரிந்து கொள்ளும் அவசரம். 20 மைல்கள் அப்பால் உள்ள அவளின் ஊருக்கு வந்தவன், ஒருவாறாக அவளின் வீட்டைக் கண்டுபிடித்து விட்டான். எட்ட நின்று நோட்டம் விட்டுகொண்டிருந்தவனுக்குப் பொழுது போனதே தெரியவில்லை. இருப்பினும் அன்று அவளை காணமுடியவில்லையே என்ற தவிப்பு வாட்டியது. இனியும் நின்று பிரயோசனம் இல்லை என்று உணர்த்தவனாய் சைக்கிளை வீடு நோக்கித் திருப்பினான் ஒரு தீர்மானத்துடன். போகும்போது இருந்த ஆவல் காரணமாகக் களைப்பை உணராதவன், இப்போது மனவலியுடன், உடல் வலியும் சேர்ந்ததால் மிகவும் சோர்வுடன் வீடு வந்து சேர்ந்தான்.

நீண்ட நேரமாகியும் காணாததால் துடித்துப் போன தாய், மகனை கண்டதும் "ஏண்டா தம்பி வந்ததும் வராததுமாய் அப்படி என்ன தான் வேலையோ. சரி சரி குளிச்சுட்டு வா. கடையில சாப்பிட்டு நாக்கு செத்துப் போயிருக்கும். இங்கை நிக்கிற நாளிலையாவது நல்ல சாப்பாடு சாப்பிடு"

என்று கூறவும் "படிக்கிற பிள்ளைக்கு என்ன அவசர வேலையோ. அவனை கேள்வி கேட்கிறதை விட்டு சாப்பாட்டை போடும்" என்று அம்மாவை அதட்டினார். அவர்களின் பாசத்தை

உணரும் நிலையில் அப்போது அவனில்லை. ஒப்புகாக சாப்பிட்டு விட்டு, படுக்கையில் விழுந்தான். அசதியில் கொஞ்சம்கூட நேரம் தூங்கி விட்டான்.

ஏதோ சத்தம் கேட்டு எழுந்தவன், மணி 9 ஆனது உணர்த்து, துடித்துப் பதைத்து எழுந்து, கிணற்றடிக்கு ஓடினான். அவசரமாக புறப்பட்டவனை, அம்மாவின் குரல் மறித்தது. "எங்க தம்பி அவசரமாக வெளிக்கிட்டாய்." "சும்மா அவனை என்ன குறுக்கு விசாரணை செய்துகொண்டு. ஃபிரன்சை பார்க்கப் போகிறானக்கும்" என்றார் அப்பா. "என்னணடாலும் சாப் பாட்டுக்கு வந்திடு தம்பி" இது அம்மா. ஒப்பிற்கு தலையாட்டிவிட்டு பை ஒன்றுக்குள் சில உடுப்புகளை திணித்துக்கொண்டு சைக் கிளை மிதிக்கத் தொடங்கினான் மீண்டும் அவளது வீடு நோக்கி.

சைக்கிள் மணி ஓசை கேட்டு வெளியில் வந்த தந்தையிடம் "நான் யாழினின்டை ஃபிரன்ட். யாழினி நிக்கிறாவோ." அவனுடைய வித்தியாசமான தோற்றத்தையும் விகாரமான சிரிப்பையும் கண்டதும் சற்று நெருடலுன், "பிள்ளை யாழினி" என்று மகளை அழைத்துவிட்டு உள்ளே சென்று விட்டார்.

வெளியே வந்த யாழினிக்கு பெரும் அதிர்ச்சி. ஒருவாறு சுதாரித்துக்கொண்டு "ஹல்லோ என்ன இந்தப் பக்கம்" என்று பதைபதைப்பை வெளிக்காட்டாதாவாறு கேட்டாள். "நான் உம்மோடை வாழுறது எண்டு வீட்டை விட்டுட்டு வந்திட்டன். நீதான் என்டை லவ்வை ஏற்க வேணும். நான் இனி இங்கை தான் இருக்கப்போறன்."

தலையில் இடியிறங்கியது போலிருந்தது அவளுக்கு. "நான் தான் அப்பவே சொல்லிபோட்டனே எனக்கு உம்மில விருப்பம் ஒன்றும் இல்லையென்று. பிறகு ஏன் இப்படியெல்லாம் செய்கிறீர்" என்றாள் அழாத குறையாக.

அவனோ நகருவதாக இல்லை.

யன்னல் வழியாக நோட்டம் விட்டுக்கொண்டிருந்த அவளது அப்பா, ஏதோ விபரீதம் நடக்கபோவதை உணர்ந்தவ ராய் வாசலுக்கு விரைந்தார். "தம்பி உள்ளை வாங்கோ" என்று அவனை உள்ளே அழைத்து சென்றார். ஏனெனில் வாசலில் நடப்பதை அக்கம் பக்கம் பார்த்தால் வேறு வினையே வேண்டாம் என்பதால். உள்ளே அவனை அமரச் செய்துவிட்டு, மகளை உள்ளே கூட்டிச்சென்று நடந்தவற்றை கேட்டறிந்து கொண்டார்.

அழுதுகொண்டிருக்கும் மகளை சமாதானம் செய்து விட்டு வெளியே வந்தவர், "தம்பி நீங்கள் படிச்ச பிள்ளை . இப்படியெல்லாம் அநாகரிகமாக நடக்க கூடாது" என்று அவனை சமாதானம் செய்து அனுப்பப் பார்த்தார். அவனோ எதற்கும் மசிந்து விடுபவனாக இல்லை. "இல்லை அங்கிள். என்னால யாழினி இல்லாமல் வாழ முடியாது" என்று பிடிவாதம் பிடித்தான். நேரம் தான் சென்றதே ஒழிய அவன் நகருவதாக இல்லை . "சரி இருங்கோ தம்பி வாறன்" என்று கூறியவர் உள்ளே எழுந்து சென்றார். சிறிது நேரத்திற்கெல்லாம் திரும்பி வந்து அவனது படிப்பு பற்றியெல்லாம் பேசிக்கொண்டிருந்தார்.

திடீரென வாசலில் காவல்துறையினர். வந்தவர்கள் அவனை அள்ளி ஜீப்பில் போட்டுக் கொண்டு சென்றுவிட்டனர்.

நிலைமை விபரீதம் ஆகுமுன் சமயோசிதமாக கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவந்த திருப்தியுடன் மகளை ஆறுதல் படுத்திக்கொண்டிருந்தார்.

அள்ளிச் சென்றவர்கள் அவனை விசாரிக்கத் தொடங்கியதும் அவனது உண்மை நிலைமையை அறிந்து பெற்றோருக்கு அறிவித்து விட்டு அவனை "மந்திகைக்கு" அனுப்பி விட்டனர்.

தகவலறிந்த தாய் அயலிலுள்ளவர்கள் யாரோ தன் பிள்ளைக்கு செய்வினை வைத்ததால் தான் இந்த நிலை என்று ஒப்பாரி வைத்துக்கொண்டிருந்தாள். சோகத்தை வெளியில் காட்ட முடியாமல் உள்ளே போட்டு வைத்துக்கொண்டு பித்துப் பிடித்தவராய் மந்திகையில் உள்ள "மன நலம் பாதிக்கப்பட்டோர்" நிலையம் நோக்கி சைக்கிளை செலுத்தினார் தந்தை.

விடுமுறை முடிந்து வளாகம் திரும்பியவர்கள் கூட்டம் கூட்டமாக கூடி நின்று கதைத்தார்கள். சும்மா இருந்தவனை "ஏத்தி" விட்டுத்தான் இது நடந்தது என்பதை மறந்து. ரெண்டு நாள் அவனைப் பற்றியே பேச்சு.

அடுத்த கிழமை எல்லாம் மறந்து, மீண்டும் ஒருவனை "மந்திகைக்கு" அனுப்புவதுக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள்.

## ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைப் போட்டியில் சித்தியெய்தி எமது ஊருக்கு பெருமை சேர்த்த மாணவச் செல்வங்கள்



சர்வானந்தன் ஆதித்யானந் 179 புள்ளிகள்



ஆருஷா லிங்கனதாஸ் 170 புள்ளிகள்



நதீஷ்வரன் ஹரீஷ் 157 புள்ளிகள்



வசந்தன் வர்ஜிகன் 149 புள்ளிகள்



அஷ்விதா சாம்பசிவம் 169 புள்ளிகள்



டெறிக்கா றொபின்சன் 164 புள்ளிகள்